இலங்கை மத்திய வங்கி
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2020 யூன் 19 | அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் | 2020இன் 3ஆம் இலக்கம்

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## கொவிட்-19 வைரஸ் நோய் மூலம் பாதிக்கப்பட்ட சுயதொழில் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக வர்த்தகங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மீதான 2020இல் 04,05 மற்றும் 06ஆம் இலக்கங்களைக் கொண்ட சுற்றறிக்கை, அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் மீதான 2020.03.27 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் அடகு முற்பணங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீதான 2020 இன் 1ஆம் இலக்க நாணய விதிச்சட்ட கட்டளை

கொவிட் -19 இனால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தொடர்பில் 2020.05.06ஆம் திகதி வரை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ‘‘அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்’’ தொகுக்கப்பட்டுள்ளன என்பதனையும் இதனுள் காணப்படுகின்ற பதில்கள், ஏதேனும் எதிர்கால ஒழுங்குவிதிகளை அத்துடன்/ அல்லது திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட மாற்றங்களுக்கு உட்படுவன என்பதனையும் தயவுசெய்து கவனத்திற் கொள்க.

<u>அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் 20ஆம் கேள்விக்கான திருத்தப்பட்ட பதில்கள்</u>

**சலுகைக்/படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின் போது வட்டிக் கூறுகளுக்கு என்ன நடக்கும்?**

- படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின் இறுதிவரை தவணைக் கொடுப்பனவுகளைச் (வட்டி + மூலதனம்) செலுத்தத் தேவையில்லை. படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலம் முடிவடைகின்றபோது சலுகைகள் வழங்கப்படுவதற்கு முன்னர் வாடிக்கையாளர்கள் இணங்கியவாறு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தொடங்க வேண்டும்.
- எவ்வாறாயினும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தொடர்பான படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின் போது வைப்பு/ கடன்பாட்டு பொறுப்புகளுடன் தொடர்புடைய வட்டிச் செலவுகள் பற்றி கரிசனைகளை எழுப்பியுள்ளதுடன் இது தொடர்பில் உயர் அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளனர். அத்தகைய உத்தியோகபூர்வ முறைப்பாடுகளினதும் அதனைத் தொடர்ந்த இலங்கை மத்திய வங்கியுடனான கலந்துரையாடல்களினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் பிற்போடப்பட்ட தவணைக் கடன்களின் தவணைக் கொடுப்பனவுகள் மீது பின்வருமாறு மேலதிக வட்டியினை அறவிடுவதற்கு வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

- ➢ ரூபாயில் வழங்கப்பட்ட சமப்படுத்தப்பட்ட மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுக் கடன்கள் தொடர்பில் பிற்போடப்பட்ட தவணைக் கொடுப்பனவுகள் மீது மேலதிக வட்டியாக ஆண்டுக்கு 7% வரை.
- ➢ மேற்குறித்த வட்டியானது நீடிக்கப்பட்ட எஞ்சியுள்ள கடன் காலத்தின் இறுதியில் அறவிடப்பட வேண்டும்.
- ➢ ரூபாயில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட வேறு வகையான கடன் வசதிகளுக்காக வங்கிகளும் கடன்பெறுநர்களும் பிற்போடப்பட்ட தவணைக் கொடுப்பனவுகளுக்கென சலுகை வட்டி வீதமொன்றின் மீது இணங்கிக்கொள்ள வேண்டும்.

**<u>அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் 28ஆம் கேள்விக்கான திருத்தப்பட்ட பதில்கள்</u>**

**மேலதிகப் பற்றுகளுக்காக கிடைக்கப்பெறும் சலுகைகள் யாவை?**

- ▪ 2020.09.30 அன்று வரையான காலப்பகுதியின் போது தீர்ப்பனவு செய்ய வேண்டியதாக வருகின்ற அல்லது முதிர்ச்சியடைகின்ற அல்லது மீளாய்வு செய்யப்படுகின்ற நிலையான மேலதிகப் பற்று வசதிகள் 2020.09.30 வரை நீடிக்கப்பட்டுள்ளன.
- ▪ எனினும், 2020.03.25 அன்றுள்ளவாறான தற்காலிக மேலதிகப் பற்று வசதிகள் விடயத்தில் காலாவதியானது தகைமையுடைய கடன்பெறுநர்களுக்காக இரண்டு மாதங்களினால் நீடிப்புச் செய்யப்பட வேண்டும். அத்தகைய தற்காலிக மேலதிக வசதிகள் மீதான வட்டி வீதமானது நீடிக்கப்பட்ட காலப்பகுதியின்போது ஆண்டுக்கு 13% உச்சம் கொண்டதாக இருக்கும்.
- ▪ படுகடனை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான சட்டரீதியான உரிமைக் காலப்பகுதியின்போது கடன்பெறுநர்கள் வட்டி செலுத்துவதற்கு வேண்டப்படவில்லை. எவ்வாறாயினும், மேலதிகப் பற்றுகள் மீது வட்டியினை கொடுப்பனவு செய்ய விரும்புகின்ற எவரேனும் கடன்பெறுநர் விரும்பினால் அதனை செலுத்தலாம்.

**-----அடிக்கடி கேட்கப்படும் இக்கேள்விகள் 2020.06.19 அன்று இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டவையாகும்.------**